1984 பிப்ரவரி 17]

கிறது. ஆனால், அனைத்து இயக்கங்களின் சார்பிலும், இதற்கு அரசாங்கத்தோடு ஒத்துழைத்தால் இதன் பலன் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

பெரு மழையிலும் மேலவையை நடத்திக்கொண்டிருப்பதுபற்றி.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன். அடாது மழை பெய்தாலும், விடாது மேலவையை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். வீட்டிலிருந்து மழையில் வருவதற்கு மிகுந்த கஷ்டமாக உள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கிளாரிபிகேஷன் என்றால் அதை முன் கூட்டியே தலைவரிடம் தெரிவிக்கவேண்டும். அடுத்து, கவன ஈர்ப்புத் தீர்மானம்.

3. கவன ஈர்ப்பு.

அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு தாராள ஓய்வூதியத் திட்டத்தின் பயனை அளிப்பது குறித்து.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"உச்ச நீதி மன்றமும் இந்திய அரசும் ஆணைகள் பிறப்பித்திருந்தும் கூட, அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு அவர்கள் எந்தத் தேதியிலிருந்து ஓய்வு பெற்றிருந்தாலும் தாராள ஓய்வூதியத் திட்டத்தின் பயனை ஓய்வூதியம் பெறுபவர் அனைவருக்கும் கொடுக்க அரசு தவறியது குறித்து".

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இது குறித்து, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 325 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு தாராள ஓய்வூதியத் திட்டத்தின் பயனை அளிப்பது குறித்து

[1984 பிப்ரவரி 17

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஓய்வு பெற்ற பணியாளர்கள் அனைவருக்கும் அவர்களுக்குரிய ஓய்வூதியப் பயனை அளிக்க அரசு முடிவு செய்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதுபற்றி கடந்த ஆண்டும் இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுத்தேன். உச்ச நீதி மன்றம் தீர்ப்பு கொடுத்து, அதற்குப் பிறகு மத்திய அரசு அவர்களது பணியாளர்களுக்கான உத்திரவை இயற்றிவிட்டது. அதேபோன்று கர்நாடக அரசும் செய்திருக்கிறது. ஆகவே, தமிழக அரசும், இது குறித்து எவ்வளவு சீக்கிரம் அளிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இந்தப் பயனை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எந்தத் தேதியிலிருந்து அவர்களுக்கு அந்தப் பயனை அரசு தர முடிவு செய்திருக்கிறது, பாக்கியை எப்படி அளிக்க உத்தேசித்துள்ளது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேல‘வைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் இதுபற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1979க்கு முன்பும் ஓய்வு பெற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுடைய தன்மைகளும், அதற்கான விதிமுறைகளும் பல்வேறு முறைகளைப் பொறுத்து மாறியிருக்கின்றன. ஆகவே அவர்களுக்கு தனிப்பட்ட கணக்குகளை எடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே இப்படி தனிப்பட்ட திட்டம் வகுத்து, அதை ஏற்றுக்கொள்வதா, அல்லது பொதுவான கருத்தை ஏற்றுக்கொள்வதா என்று பல்வேறு மாநிலங்களில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இங்கே இதற்கென்று ஒரு தனிக் குழுவை அமைத்து, அவர்கள் இதுகுறித்து ஆராய்ந்து வருகிறார்கள். இதை எவ்வளவுக்கெவ்வளவு விரைவாக முடித்து வழங்க முடியுமோ அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. எப்போது வழங்கினாலும் முந்தைய ஆண்டுகளுக்கும் சேர்த்துத்தான் தரப்படுகிறது என்ற காரணத்தால், தொகை முழுவதும் கிடைக்கும். அதில் குறையேற்பட வாய்ப்பில்லை. சில மாதங்கள் கழித்துக் கிடைத்தாலும், தொகை முழுவதும் கிடைக்கும் அதில் குறை ஏற்பட வழியில்லை.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : தலைவர் அவர்களே, உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பில் ஓய்வு பெற்றவர்களுடைய அவல நிலைமைபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்காக தனி சம்பளக் கமிஷன்போல் பென்சனர் கமிஷன் அமைக்க அரசு முன்வருமா ?

1984 பிப்ரவரி 17]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஸ்பெஷல் கமிஷன் வைக்க வேண்டிய அவசியமில்லை. இதற்காக 18—1—1984-ல் அதிகாரிகளைக் கொண்ட தனிக் குழு ஒன்று அமைக்கப் பட்டு, இந்தப் பிரச்சினைகளெல்லாம் ஆராயப்பட்டு வருகின்றன. விரைவில் நடவடிக்கை எடுப்பதில் கஷ்டமான நிலைமைகள் இருந்தால், அதை இன்னும் வலிவுபடுத்தி விரைவுபடுத்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

4. ஆளுநர் உரை மீதான விவாதம்—தொடர்ச்சி.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் எனது கருத்துக்களையும் சொல்ல அனுமதித்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டு நாட்களாக சத்துணவுத் திட்டம்பற்றி ஒரு முக்கியமான பிரச்சினை பல இடங்களில் பேசப்பட்டு வருகிறது. அதிலே ஒன்று போலியோ நோய் வந்த ஒரு சிறுவனுக்கு சத்துணவு உண்ட காரணத்தால் போலியோ நோய் போய் விட்டது என்று அரசு சொன்னதாகச் சொன்னார்கள். அது எப்படி நியாய மானது என்ற பிரச்சினையையும் சில எதிர்க்கட்சி நண்பர்கள் பேசியதை பத்திரிகையிலும் பார்த்தேன்; நேரிலும் தெரிந்துகொண்டேன்.

இதுகுறித்து 'தமிழரசு' பத்திரிக்கையில் டிசம்பர் 1983 இல் ஒரு செய்தி வந்தது. அதிலே அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், காத்த மங்கலத்தில் வீரையா என்பவருடைய மூன்றாவது குழந்தை, சத்துணவுத் திட்டத்தில் சேர்ந்து 54 குழந்தைகளோடு சாப்பிட்டதாகவும், இந்தக் குழந்தைக்கு மட்டும் ஏதோ காரணத்தால் திடீரென்று போலியோ நோய் வந்து சிரமப்படுகிற நிலை ஏற்பட்டது என்றும், அந்த நிலையில் சத்துணவு சாப் பிட்டதோடு மட்டுமல்லாமல், பிசியோதெரபி என்ற பயிற்சியையும் செய்ததால் அந்த நோய் போனது என்றும் போட்டிருக்கிறார்கள்.

"Because of the physio-therapy exercises given by the organiser of the Noon-Meal Centre, he began to walk. He began taking noon meals daily and the physio-therapy exercises given by the organiser of the Noon-Meal Centre. He began to walk."

என்று போட்டிருக்கிறார்கள். சத்துணவு சாப்பிட்ட தால் அந்தக் குழந்தைக்கு நோய் தீர்ந்து விட்டது என்று போடவில்லை. சத்துணவு சாப்பிட்டதால் அந்தக் குழந்தை நல்ல உடல் வளர்ச்சி பெற்றிருந் தது. அதே சமயத்தில் அதற்குரிய மருந்துகளையும் பயிற்சிகளையும்